# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**GWOP.No.** **: 292/2023**

**நாள்** **: 04.07.2025**

**ம.சா.1 திரு. பொன் விநாயகம்** – சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்த HMOP 25/2021 வழக்கு கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். செங்கோட்டை நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த DVC 12/2022 மற்றும் ஜீவனாம்ச வழக்கு எண். 16/2022 வழக்குகள் நடைபெற்று முடிவுற்றது என்று சொன்னால் சரிதான். மேற்படி DVC மற்றும் MC வழக்குகளில் குழந்தைகளை பார்க்க வேண்டும் என்று நான் மனுதாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். HMOP வழக்கில் குழந்தைகளை பார்க்கவேண்டும் என ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். சென்னை உயர் நீதிமன்றத்தில் குழந்தைகளை காணவில்லை என எனது தாயார் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. சோமசுந்தரி என்பவர் எனது தாயார் என்றால் சரிதான். அவர்தான் உயர்நீதிமன்றத்தில் மேற்படி மனுவைதாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

நான் எனது மாமா மகள் பொன் உமா சக்தி என்பவருடன் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் அவருக்கும் தொடர்பு இருப்பதால் எதிர்மனுதாரரை நான் வேண்டுமென்றே புறக்கணிக்கிறேன் என்றும், குழந்தைகளையும் பராமரிக்காமல் புறக்கணித்துள்ளேன் என்றும், அதனால்தான் எதிர்மனுதாரர் தென்காசி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஒரு புகார்

கொடுத்து அங்கு நாங்கள் சேர்ந்து வாழவேண்டும் என அறிவுறுத்தியதால் HMOP 25/2021 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அதன் பின்பு தான் எதிர்மனுதாரர் DVC, MC வழக்குகளை செங்கோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் அபுதாபியில் ஒரு தனியார் நிறுவனத்தில் மாதம் 3 லிருந்த 5 லட்ச ரூபாய் வரை சம்பளம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. அதை கருத்தில்கொண்டுதான் செங்கோட்டை நீதிமன்றம் நான் எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ.30,000/- ஜீவனாம்ச தொகை வழங்கவேண்டும் என உத்தரவிட்டது என்றால் சரியல்ல. தற்போது இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கடவுச்சீட்டை ஆய்வு செய்தால் நான் எத்தனை முறை இந்தியாவிற்கு வந்துசென்றேன் என்ற விவரம் துலங்கும் என்றால் சரிதான். 2 மாதத்திற்கு ஒரு முறை நான் இந்தியா வந்துசெல்வதன் மூலம் நான் நல்ல பொருளாதார நிலையில் உள்ளேன் என்பது துலங்கும் என்றால் எனது தாயார் உடல்நலமில்லாமல் தனியாக இருப்பதால் நான் அவ்வப்போது வந்து செல்வேன்.

உமா பொன் சக்தி என்பவர் எனது மாமன் மகள் என்றால் சரிதான், எதிர்மனுதாரர் அவருக்கு சகோதரி முறை வேண்டும். உமா பொன் சக்தியின் கணவர் 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். தற்போது ஓராண்டுக்கு முன்பாக குழந்தை பிறந்து சோமரிதன்யா என பெயரிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த குழந்தை எனக்கும் உமா பொன் சக்திக்கும் பிறந்த குழந்தை என்றால் சரியல்ல. சி.சி. 168/2023 வழக்கில் பொன் விநாயகம் முதல் எதிரியாகவும், உமா பொன் சக்தி 2ம் எதிரியாகவும், அவரது தாயார் ஜெயலட்சுமி என்பவர் 3ம் எதிரியாகவும், அவரது தகப்பனார் சுப்பையா 4ம் எதிரியாகவும் மேலும் 2 எதிரிகள் உள்ள வழக்கில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் பிணை உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரிதான், மேற்படி வழக்கு நான் வெளிநாடு செல்வதை தடுக்கும் முயற்சியாக என் மீது பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த

வழக்கில் நான் ஓட்டிவந்த ராயல் புல்லட் வாகனத்தை உமா பொன் சக்தி என்பவர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து வாகனம் தனக்குரியது என பெற்றுச்சென்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போதும் அந்த வாகனத்தை நான்தான் ஓட்டி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் சொல்வதெல்லாம் பொய் என்றும், எனக்கு உமா பொன் சக்தியுடன் தவறான தொடர்பு உள்ளது என்றும், மேற்படி ராயல் என்பீல்டு புல்லட்டை நான்தான் ஓட்டிவருகிறேன் என்றும், அதில் எனதுகுழந்தைகளின் பெயரை எழுதியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரை கஷ்டப்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

உமா பொன் சக்தி என்பவர், இந்த எதிர்மனுதாரரின் மீது செங்கோட்டை நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பல்வேறு நீதிமன்றங்களில் குழந்தைகளின் பராமரிப்பு கேட்டு மனுதாக்கல் செய்து, நிராகரிக்கப்பட்டு உயர்நீதிமன்றத்திலும் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் வேறு வழியின்றி இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 மாதங்களுக்கு முன்பு வரை எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டிய ஜீவனாம்ச தொகையை நான் சரியாக செலுத்திவந்தேன் என்றும், தற்போது வேண்டுமென்றே பணத்தை செலுத்தாமல் காலதாமதம் செய்துவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஜீவனாம்சம் கொடுக்காத பட்சத்தில் எதிர்மனுதாரரால் குழந்தைகளை வளர்க்க முடியாதுஎன்பதால் நான் வேண்டுமென்றே எதிர்மனுதாரரை கஷ்டப்படுத்த இவ்விதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலங்கள் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi